

வாக்காளர் பட்டியல் பார்வையாளரும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையருமான திரு.எம்.சந்திரசேகரன், இ.ஆ.ப., அவர்கள், தோவாளை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில், வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்ப்பதற்காக விண்ணப்பித்த நபர்களின் வீட்டிற்கு இன்று (11.11.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 793/2016 நாள்: 11.11.2016

**வாக்காளர் பட்டியல் பார்வையாளரும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையருமான திரு.எம்.சந்திரசேகரன், இ.ஆ.ப., அவர்கள், வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்ப்பதற்காக விண்ணப்பித்த நபர்களின் வீட்டிற்கு இன்று (11.11.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுபடி, வாக்காளர் பட்டியலை செம்மைபடுத்தி, 100 சதவீதம் தவறுகள் இல்லாத இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களின் அறிவுரையின்படி, தேர்தல் அலுவலர்கள் பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றுதல் போன்ற பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள்.

மேலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் சிறப்பு சுருக்க முறைத்திருத்தம் 2017-ன்படி, மேற்கொண்டு வரும் பணிகளை, வாக்காளர் பட்டியல் பார்வையாளரும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையருமான திரு.எம்.சந்திரசேகரன் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் இன்று (11.11.2016) ஆய்வு செய்தார்.

பின்னர் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புதுக்குடியிருப்பு, காந்திநகர், (பாகம் எண் 142, 144) காமராஜபுரம், பரமேஸ்வரன் தெரு, கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வெள்ளமடம், இல்லத்தார் தெரு, சகாயநகர் ஊராட்சி மற்றும் தோவாளை ஊராட்சிக்குட்பட்ட தோவாளை ஆகிய இடங்களில் உள்ள (பாகம் எண் 80, 89) பொதுமக்களிடம் தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை கேட்டறிந்தபின்னர், 18 வயது நிரம்பிய, வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்ப்பதற்காக விண்ணப்பித்த நபர்களின் வீட்டிற்கு இன்று (11.11.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு.ஆர். ராஜ்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு. பி.வி. சரவணன், வட்டாட்சியர்கள் திரு. எ.வி. மூர்த்தி (அகஸ்தீஸ்வரம்), திருமதி. முத்துலெட்சுமி (தோவாளை), தேர்தல் தனி வட்டாட்சியர் திரு. சுப்பிரமணியன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.